காන්තාව සහ මාධ්‍ය සාමූහිකය
பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டமைப்பு
Women and Media Collective
1984-2024
WMC

18 May 2026

அனுராதபுரத்தில் உள்ள 'அட்டமஸ்தான'தின் பிரதான குரு மற்றும் பாதுகாவலர் என்ற வகையில் வணக்கத்திற்குரிய பதவியை வகிக்கும், மிக உயர்ந்த பௌத்த பிக்குகளில் ஒருவரான பல்லேகம ஹேமரத்ன தேரோவால், 15 வயது சிறுமி ஒருவர் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டதாகக் கூறப்படுவது குறித்து நாங்கள் ஆழ்ந்த அதிர்ச்சியையும், மிகுந்த கவலையையும் தெரிவித்துக் கொள்கிறோம். இத்துஷ்பிரயோகம் 2022-ஆம் ஆண்டில், அனுராதபுரத்தில் உள்ள ஒரு விகாரையில் பலமுறை நிகழ்ந்ததாகக் கூறப்படுகிறது. அக்குரு, அனுராதபுர பிரதான நீதிபதியால் கைது செய்யப்பட்டு, பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டு, தற்போது கொழும்பு சிறைச்சாலையில் மருத்துவக் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளதாக நாங்கள் அறிகிறோம். இவ்வன்முறைக்கு உடந்தையாக இருந்திருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில், சிறுமியின் தாயாரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை (NCPA) தீவிரமாகச் செயற்பட்டு வருவதாக நாங்கள் அறிகிறோம். NCPA-யின் தலையீட்டைத் தொடர்ந்து இக்கைதுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், அவர்கள் இந்த வழக்கில் தொடர்ந்து தீவிரமாக ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறுமி ஒருவருக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட வன்முறையின் காரணமாகவும், அதேசமயம் மத அதிகாரத்திலும் நம்பிக்கையிலும் மிக உயர்ந்த பதவி ஒன்றில் இருக்கும் ஒரு தனிநபர் இதில் சம்பந்தப்பட்டிருப்பதாலும், இந்த வழக்கு மிகவும் கவலையளிக்கிறது. அதிகார நிறுவனங்களுக்குள் நிகழும் பாலியல் வன்முறைக் குற்றச்சாட்டுகள், அதிகாரம், மௌனம், தண்டனையின்மை மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் நீதியை நாடுவதில் எதிர்கொள்ளும் தடைகள்

Telephone: +94-11-2690192, 2690201, 2690452, 2690453, 2690457 Fax: +94-11-2690201
Email: wmcsrilanka@womenandmedia.org Web: www.womenandmedia.org
facebook.com/womenandmediacollective twitter.com/womenandmedia
Registration No. GA 2476

56/1, සරසවි මාවත, කාසල් වීදිය, කොළඹ 8, ශ්‍රී ලංකාව
56/1, சரசவி லேன், காசல் வீதி, கொழும்பு 8, இலங்கை.
56/1, Sarasavi Lane, Castle Street, Colombo 8, Sri Lanka

குறித்த கடினமான ஆனால் அவசியமான மற்றும் முக்கியமான கேள்விகளை எழுப்புவதற்கு அவை நம்மைத் தூண்டுகின்றன.

பாலியல் வன்முறை என்பது வெறும் ஒரு தனிநபரின் செயல் மட்டுமல்ல. மாறாக அது பெரும்பாலும் சமமற்ற அதிகார உறவுகள் மற்றும் அதிகாரத்தைப் பாதுகாக்கும் அதேவேளையில் பெண்களையும் சிறுமிகளையும் பாதிக்கப்படக்கூடியவர்களாக ஆக்கும் ஆணாதிக்க சமூகக் கட்டமைப்புகளால் ஊக்குவிக்கப்படுகிறது என்று நாங்கள் நீண்ட காலமாக வாதிட்டு வருகிறோம். எந்தவொரு தனிநபரின் தகுதியோ அல்லது பதவியோ அவர்களைக் கண்காணிப்புக்கும் பொறுப்புக்கூறலுக்கும் அப்பாற்பட்டவர்களாக ஆக்க முடியாது. அவ்வாறு ஆக்கவும் கூடாது. எனவே, இந்த வழக்குத் தனிநபர் பொறுப்புக்கூறல் பற்றியது மட்டுமானதல்ல. நிறுவனங்களும் அமைப்புகளும் சிறுமிகளைப் பாதுகாக்கத் திறனுள்ளவையா, பாதிக்கப்பட்டவர்கள் அச்சமின்றி நீதியை நாட முடியுமா, மற்றும் மதிக்கப்படும் இடங்களிலும் அதிகாரக் கட்டமைப்புகளிலும் வன்முறை நிகழும்போது கூட அதை எதிர்கொள்ள சமூகம் தயாராக உள்ளதா என்பது பற்றியும் இது பேசுகிறது. இச்செயல்முறையின் ஒவ்வொரு கட்டத்திலும் சிறுவர் உரிமைகள், கௌரவம், பாதுகாப்பு மற்றும் நலன்கள் முதன்மையானதாக இருக்க வேண்டும்.

**ஆகவே நாங்கள் பின்வரும் விடயங்களைக் கோருகின்றோம்:**

- குற்றம் சாட்டப்பட்டவரின் தகுதியினால் எழும் செல்வாக்கு அழுத்தம் அல்லது பணிவு ஆகியவற்றிலிருந்து விடுபட்ட, சுதந்திரமான, பாரபட்சமற்ற மற்றும் விரைவான விசாரணை:
- நடவடிக்கைகள் முழுவதும் பாதிக்கப்பட்டவரின் நலன்களையும் உரிமைகளையும் பாதுகாப்பதற்காக, சிறுமியிடம் அக்கறையுள்ள ஒரு மூத்த சட்டத்தரணியை நியமித்தல்:

• சிறுமியை அச்சுறுத்தல், மீண்டும் மன அதிர்ச்சிக்கு உள்ளாக்குதல், பாதிக்கப்பட்டவரைக் குறை கூறுதல் அல்லது பொதுவெளியில் அம்பலப்படுத்துதல் ஆகியவற்றுக்கு உள்ளாக்கப்படாமல் இருப்பதை உறுதிசெய்ய கடுமையான பாதுகாப்பு நடவடிக்கைகள்:

• சிறுமி பாதுகாப்புத் தரநிலைகள் மற்றும் பாதிக்கப்பட்டவரை மையமாகக் கொண்ட அணுகுமுறைகளுக்கு இணங்க, அனைத்துச் சாட்சியங்களும் வாக்குமூலங்களும் உணர்வுப்பூர்வமாகவும் இரகசியமாகவும் அளிக்கப்பட வேண்டும்:

• சட்டச் செயல்முறை முழுவதும் சிறுமிக்கு விரிவான உளவியல், உணர்ச்சி மற்றும் பாதுகாப்பு ஆதரவு:

• இவ்விஷயத்தின் தீவிரத்தையும் உணர்திறனையும் கருத்தில் கொண்டு, சட்டமா அதிபர் திணைக்களத்தின் தீவிர மேற்பார்வை:

• நடவடிக்கைகளைக் கண்காணிக்கவும், பாதிக்கப்பட்டவருக்கு ஆதரவளிக்கவும், பொறுப்புக்கூறலை உறுதிசெய்யவும் இலங்கை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, தேசிய பெண்கள் ஆணைக்குழு மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகியவற்றின் தொடர்ச்சியான ஈடுபாடு.

நீதி என்பது, கூறப்படும் குற்றங்களுக்கான பொறுப்புக்கூறலை மட்டும் கோருவதில்லை: மாறாகப் பாதிக்கப்பட்டவரை மையப்படுத்தி, அவரது கௌரவத்தைப் பாதுகாத்து, எந்தவொரு நிறுவனமோ, பாரம்பரியமோ, அல்லது அதிகாரப் பதவியோ பெண்கள் மற்றும் சிறுமிகளின்

உரிமைகளுக்கும் பாதுகாப்பிற்கும் மேலானதல்ல என்பதை உறுதிப்படுத்தும் ஒரு செயல்முறையையும் கோருகிறது.

- பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டமைப்பு

Telephone: +94-11-2690192, 2690201, 2690452, 2690453, 2690457 Fax: +94-11-2690201
Email: wmcsrilanka@womenandmedia.org Web: www.womenandmedia.org
facebook.com/womenandmediacollective twitter.com/womenandmedia

Registration No. GA 2476

56/1, සරසවි මාවත, කාසල් වීදිය, කොළඹ 8, ශ්‍රී ලංකාව
சரசவி லேன், காசல் வீதி, கொழும்பு 8, இலங்கை.
Sarasavi Lane, Castle Street, Colombo 8, Sri Lanka